සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே -பாரதி

விசேட இதழ் 2 ஓகஸ்ட் 4, 1994 விலை 6/=

உள்ளே -
• தொண்டாவின் ஊழல்கள்
• 17 வருடப் பயங்கரம்!

# தொண்டாவின் மோசடி!

தோட்டத் தொழிலாளருக்கு அவர்கள் வசிக்கும் லயங்களைச் (Line - Rooms) சொந்தமாக்கும் தன்னுடைய ஐம்பது வருடகாலக் கனவு நிறைவேறியுள்ளதாகப் புளகாங்கிதமடைந்திருக்கிறார் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள்.

ஜூலை 17ம் திகதி நுவரெலியா பொது மைதானத்தில் இடம் பெற்ற விழாவொன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் முன்னிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் லயங்கள் அவர்களுக்கே சொந்தம் என அறிவிக்கும் 'உரிமைச் சான்றிதழ்'களும் வழங்கப்பட்டன.


இந்த ''உரிமைச் சான்றித்ழ்'' உண்மையிலேயே லயங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சொந்தம் என்பதை உறுதிப்படுத்துகின்றனவா என்று தெரிந்து கொள்வதற்காகச் சான்றிதழ்களின் பிரதியொன்றைச் ''சரிநிகர்'' பெற்றுக் கொண்டது.

Estate Worker Housing Development Programme Certificate என்று தலைப்பிடப்பட்ட அந்த உரிமைச் சான்றிதழ், எவ்வகையிலும் லயங்களைத் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்குவது தொடர்பானது அல்ல. மேலும், இந்தச் சான்றிதழ்கள் மூலம் லயங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாகும் என்பது ஒரு அப்பட்டமான பொய்யாகும்.

இந்த உரிமைச் சான்றிதழ்களின் தமிழ், ஆங்கிலப் பிரதிகளை நாம் பிரசுரிக்கிறோம். தமிழ் மொழிச் சான்றிதழில் என்ன எழுதியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளத் தமிழில் உன்னத பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களை நாம் இன்னும் தேடிக் கொண்டிருக்கிறோம்.

உண்மையில் இந்தச் சான்றிதழ்கள் தெரிவிப்பது என்னவென்றால் லயங்கள் அனைத்தும் ஒரு வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்படும் என்பதே. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் தோட்ட நிர்வாகமே பெரும்பங்கு வகிக்கும் என்பதோடு தோட்டத்துரைமாரே இதன் தலைவர்களாகவும் இருக்கப் போகிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்களது வசிப்பிடமான லயங்களைச் சொந்தமாக்கும் ஒரு ''எண்ணம்'' இருப்பதாக மேலோட்டமாக இந்தச் சான்றிதழ்கள் தெரிவித்தாலும் லயங்களைத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்குவது பற்றி எந்த ஒரு.திட்டவட்டமான உறுதிப்பாடும் இந்தச் சான்றிதழிலில்லை.




இந்தச் சான்றிதழ்களைக் ''காணி உறுதி'' மாதிரிப் புனிதமாக வழங்கி வருகிற தொண்டமான் அவர்கள் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களை இரக்கமின்றி ஏமாற்றுகிறார்.

இதுபற்றிச் சரிநிகருக்கு கருத்துத் தெரிவித்த தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியின் அமைப்பாளரும் பழம்பெரும் தொழிற் சங்கவாதியுமான எஸ்.நடேசன் அவர்கள், இந்தச் சான்றிதழ்களுக்கு பொறுப்பான எந்த அரசாங்க அதிகாரியும் சான்றளிக்கவில்லை. இவை ஒருபோதுமே காணி உறுதிகளாக அமைய மாட்டா'' என்று வலியுறுத்தினார்.

''தொண்டமானும் அவரது கட்சியினரும் லயங்களைத் தொழிலாளருக்குச் சொந்தமாக்கி விட்டோம் என்று தேர்தல் கூட்டங்களில் பிரசாரம் செய்வது ஒரு மோசடி மட்டுமல்ல 1981 பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் படி ஒரு சட்ட மீறலான செயலாகும்'' என நடேசன் அவர்கள் மேலும் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களின் போதும் தொண்டமான் அவர்கள் மே 30, 1993 இலிருந்து லயங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கப்படும் என்று அறிக்கை விட்டிருந்தார். (ஆதாரம் ஏப்ரல் 30, 1993 வீரகேசரி) ஆனால் என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியும்.

''மலையக மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நிலம் சொந்தமாக வேண்டும் என்பது எங்கள் அனைவருடையதும் கனவுதான். லயங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக முடியுமென்றால் அதை விட மகிழ்ச்சி தரும் விஷயம் எனக்கு வேறொன்றுமில்லை. ஆனால் இப்போது தொண்டமான் செய்வது என்னவென்றால் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுகிற விஷயமாகும். இது பற்றித் தேர்தல் ஆணையாளருக்கும் நாங்கள் விரிவான கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறோம்'' என்றும் எஸ்.நடேசன் அவர்கள் குறிப்பிட்டார்.

''ஏனைய தமிழ்ப் பத்திரிகைகள் இந்த விஷயங்களை இருட்டடிப்புச் செய்து வருகின்றன. தொண்டமானை விமர்சிக்கும் அல்லது அவரது பொய்மையை அம்பலப்படுத்தும் தகவல்களும் செய்திகளும் வேறு எந்தத் தமிழ்ப் பத்திரிகையிலுமே இடம் பெறமுடியாத அளவுக்கு தொண்டமானின் பலம் இருந்து வருகிறது'' என்றும் எஸ்.நடேசன் அவர்கள் சுட்டிக் காட்டினார்.

இம்முறையும் ஐ.தே.க. அரசை பதவியிலமர்த்த தொண்டமான் அவர்களும் இ.தொ.காவும் இரவு பகலாக உழைப்பது ஒரு வரலாற்றுத் துரோகமாகவே பதிவு செய்யப்படப் போகிறது என்பதில் சந்தேகமில்லை. அந்த நிலையில் இ.தொ.காவின் அஸ்தமனம் ஆரம்பமாகி விட்டது என்று குறிப்பிடுவதும் சாலப் பொருந்தும்.



# 17 வருட பயங்கரம்

ச.பாலகிருஸ்ணன்

1970- 77 காலகட்டத்தில் ஆட்சி செய்த சி.ல.சு.கட்சி தலைமையிலான ஆட்சியின் போது பல சிறுபான்மையின விரோத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1972ம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பில் சிறுபான்மையினரின் எதிர்பார்ப்புகள் புறக்கணிக்கப்பட்டமை, எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் வழக்குகளின்றி நீண்டகாலம் சிறையில் அடைக்கப்பட்டமை, தமிழ்ப் பிரதேசங்களில் பொலீசாரினதும், இராணுவத்தினரினதும் அட்டூழியங்களை கட்டவிழ்த்து விட்டமை போன்ற செயற்பாடுகள் இனத்துவ முரண்பாடுகள் கூர்மையடையவும், தனித்தமிழ்நாடு கோரிக்கை உருப்பெறவும் காரணிகளாக அமைந்தன.

தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட ஆரம்ப காலகட்டத்தில் அரசு சார்பான சில அரசியல்வாதிகள் இனவாத ரீதியில் மலையக மக்களுக்கு எதிராகச் செயற்பட்டமை மலையகத்தில் சில பிரச்சினைகளை ஏற்படுத்தியது. இக் காலகட்டத்தில் ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து அரசுக்கு எதிராக தொண்டமான் மேற்கொண்ட அடாவடித்தனங்களின் காரணமாக பழிவாங்கலுக்கும் ஆளாக வேண்டிய நிலைமை மலையகத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டது. தனது கட்சி ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தோட்டங்களை வெளியார்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை எதிர்த்து வெளியேற மறுத்த தொழிலாளர்கள் சில இடங்களில் தாக்கப்பட்டனர்.

இவ்வரசு நடைமுறைப்படுத்திய கட்டுப்பாடான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக ஏற்பட்ட உணவுப் பொருட்கள் பற்றாக்குறையும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடும், சிறுபான்மையினர் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கையும் 1977ம் ஆண்டுத் தேர்தலில் இவ்வரசு படுதோல்வியடையக் காரண மாயிற்று.

எனினும் தோட்டத் தொழிற்துறையை அரசுடைமையாக்கியமை, தோட்டப் பாடசாலைகளை அரச பாடசாலைகளாக்கியமை போன்ற இவ்வரசின் செயற்பாடுகள் மலையக மக்களுக்கு நன்மையான செயற்பாடுகளாகும்.

அக்கால கட்டத்தில் பலவித அடக்கு முறை நிலைமைகள் நிலவினாலும் தமிழ் மக்கள் ''தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை'' முன் வைப்பதற்கும் இக்கோரிக்கையைப் பிரதானக் கோரிக்கையாக முன்வைத்து 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பிரச்சாரம் செய்வதற்கும் தேவையான ஜனநாயக சூழ்நிலை இருந்தது என்பதை மறந்து விட முடியாது.

1977ம் ஆண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்து ஐ.தே.கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. பதவிக்கு வந்ததன் பின்பு அவர்களினால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது குடியரசு யாப்பானது தமிழ் மக்களின் நியாயபூர்வமான எதிர்பார்ப்புகளை அங்கீகரிக்காமல் விட்டது மட்டுமல்ல, சிங்களம் மட்டும் அரசகரும மொழி, பௌத்தம் அரச மதம் போன்றவற்றை உள்ளடக்கிய பேரினவாத ஆதிக்கத்துக்கான யாப்பியல் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதாகவே அமைந்தது. தேர்தல்களின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக ஏமாற்றமடைந்த தமிழ் மக்கள் மேலும் விரக்தியுறுவதற்கு இச்சம்பவம் காரணமாக அமைந்தது. எனவே, தமிழ் மக்கள் இந்தக் குடியரசுப் பிரகடனத்திற்காகத் தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தமிழ் இளைஞர்கள் மத்தியில் தீவிரவாத உணர்வுகள் மேலும் வளர்வதற்கு ஆரம்பித்தன. பாராளுமன்ற ஜனநாயக நடைமுறைகளைக் கைவிட்டு மாற்று வழிமுறைகளில் தமிழ் மக்களின் சுதந்திரத்தை வென்றெடுக்க வேண்டுமென்ற எண்ணம் வலுப்பெற ஆரம்பித்தது.

## ஜே.ஆரின் யுத்தப் பிரகடனம்:

மேற் கூறிய சூழ்நிலைகளின் மத்தியில் 1979ம் ஆண்டு நடுப்பகுதியில் அவசர கால விதிமுறைகளை நடைமுறைப்படுத்தி, பயங்கரவாதத் தடைச்சட்டம் என்னும் ஜனநாயக விரோதச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியமை பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் வாக்களித்ததன் மூலம் பேரின வாதத்தின் கைக்கூலிகள் தாங்கள் என்பதை தொண்டமான், இராஜதுரை தேவநாயகம் போன்ற தமிழ் அமைச்சர்கள் பிரகடப்படுத்தி விட்டார்கள்.

## ஜே.ஆரின் இனவாதம்:

ஐ.தே.கட்சியை ஒரு தீவிரப் பேரினவாதக் கட்சியாக மாற்றுவதில் முக்கிய கவனம் கொண்டு உழைத்தவர் ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆவர். 1958ம் ஆண்டு இனக்கலவரம் ஏற்படுவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாக இவரின் செயற்பாடுகள் அமைந்தன. 1979ம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அடிப்படையில் வடபிராந்தியத்தில் இராணுவ அதிகாரியாகக் கடமையாற்றிய தனது உறவினரான திஸ்ஸ வீரத்துங்கவுக்கு 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ம் திகதிக்கு முன் கிழக்குப் பிராந்தியத்தில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும் என பாசிசவாதியான ஹிட்டலரின் பாணியில் கட்டளை விடுத்தார். பல இளைஞர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூவரின் சடலங்கள் மறுநாள் கண்டெடுக்கப்பட்டன. நால்வருக்கு என்ன நடந்ததென்பது இன்னும் தெரியவில்லை. இத்தகைய பயங்கரவாதத்துடன் தான் இ.தொ.காவின் தொண்டமானுடன் கூட்டிணைந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சி ஆரம்பமானது.

## ஜே.ஆரின் இனவாத சர்வாதிகாரம்:

1978ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையானது எல்லா அதிகாரங்களும் ஒரு தனிமனிதனின் கைகளுக்குள் சேரும் நிலைமையை ஏற்படுத்தியது. இதன் மூலம் ஒரு சர்வாதிகாரப் போக்குடைய தலைமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய ஆசை ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கு ஏற்பட்டது. இந்த ஆசை நிறைவேற வேண்டுமானால் எதிர்கட்சிகளைப் பலமிழக்கச் செய்வதும், எதிர்க்கட்சிகளிடமிருந்து சவால்கள் எழ முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வதும் இவருக்கும் அவசியமாக இருந்தது. திறந்த பொருளாதாரக் கொள்கை என்னும் போர்வையில் தான் தோன்றித்தனமான முடிவுகள் மேற்கொள்வதற்கும் அவற்றிக்கான தடைகளை முறியடிப்பதற்கும் தேவையான சூழ்நிலையை எற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை இருந்தது. போதிய அரசியல் பலம் இருந்தும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இருந்த சகல வழிகளையும் கைவிட்டுவிட்டு இப்பிரச்சினையைத் தீர்க்கின்ற பொறுப்பை இராணுவத்திடம் ஒப்படைத்தார். ஆதலால் இந்த இராணுவத்தினரின் துப்பாக்கிகளோடு போராட வேண்டிய நிலைமையை தமிழ் மக்களின் மத்தியில் ஏற்படுத்தினார். இம்முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தென் இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களுக்கெதிரான தீவிரமான பிரச்சாரத்தை அரசு கட்டுப்பாட்டிலுள்ள தகவல் தொடர்பு சாதனங்களின் உதவியுடனும் தனது கட்சி அமைப்பின் ஊடாகவும் மேற்கொண்டார். இதன் மூலம் தென்னிலங்கையில் தீவிர தமிழ் எதிர்ப்பு உணர்வுகளை நிலைநாட்டிக் கொள்வதில் வெற்றியும் கண்டார். தமிழ் மக்களின் போராட்டமானது இல்லாதொழிந்து விடும் என்றும் எனவே சிங்கள மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் தமிழ் மக்களுடைய போராட்டம் இராணுவ ரீதியில் முறியடிக்கப்படுவது தவிர்க்கப்படமுடியாது என்றும் தமது நிலைப்பாட்டுக்கு சிங்கள மக்களுடைய ஆதரவையும் ஆரம்பத்தில் பெற்றுக் கொண்டார்.

தென்னிலங்கையில் விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய சில ஜனநாயக சக்திகள் மட்டுமே இந்த நடைமுறைகளை எதிர்த்து செயற்பட்டன. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் - அமைப்புகள் இவர்களுடன் இணைந்து செயற்பட முன்வராமையினாலும் இவர்களை உதாசீனம் செய்யும் விதத்தில்' நடந்து கொண்டதாலும் தென்னிலங்கையில் இந்த அடக்குமுறைகளுக்கெதிராக எதிர்ப்புச் சக்திகளை கட்டியெழுப்ப முடியாமல் போய்விட்டது. இந்நிலைமையானது ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் பேரினவாதமயப்படுத்தும் செயற்பாட்டுக்கு சாதகமாக அமைந்தது.

## ஆயுதமும் அரசியலும்:

1983ம் ஆண்டு தமிழருக்கெதிரான கலவரங்கள் ஓய்வதற்கு முன்பாக அவசர அவசரமாக அரசியல் யாப்புக்கான ஆறாவது திருத்தப் பிரேரணையை அரசு கொண்டு வந்தது. இத்திருத்தப் பிரேரணையானது தனிநாட்டுக் கோரிக்கையை சட்டரீதியில் தடைசெய்கின்ற ஒன்றாகும். எனவே 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது தனித்தமிழ் நாடு அமைப்பதற்கான ஆணையைப் பெற்று பாராளுமன்றம் வந்த த.வி.கூட்டணியினர் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் இருக்க முடியாத நிலைமையை இந்நடைமுறை ஏற்படுத்தியது. எனவே இவ்வுறுப்பினர்கள் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியதன் பிறகு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடிய வாய்ப்புகள் முற்றாக இல்லாமல் செய்யப்பட்டன. இதன் பிறகு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை தீர்மானிக்கின்ற பொறுப்பு இராணுவத்தினரின் துப்பாக்கியிடம் விடப்பட்டது. இந்நிலைமையானது ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் பேரின சர்வாதிகார எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ததாகவே அமைந்தது. இதன் பிறகு 1987ம் ஆண்டு வரை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசாங்கம் அழைத்த போதெல்லாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டாலும் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்வு காணக்கூடிய எந்தவித அணுகுமுறைகளையும் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் அரசு மேற்கொள்ளவில்லை. ஆனால் யுத்தத்தை தீவிரப்படுத்துவதிலேயே முக்கிய கவனத்தைச் செலுத்தியது. தேசிய பாதுகாப்பு அமைச்சகம் என்ற ஒன்றை ஆரம்பித்து தமிழர்களுக்கு எதிராக யுத்தம் செய்கின்ற பொறுப்பு அவ்வமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் மூலம் பொலிசும் முப்படைகளும் விஸ்தரிக்கப்பட்டதோடு மிகவும் கீழ்த்தரமான முறையில் பேரினவாத மயப்படுத்தப்பட்டன. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பிரதான கருத்தியல் கோட்பாடான தமிழர் விரோத உணர்வுகளுக்கு இவர்கள் உட்படுத்தப்பட்டதன் காரணமாக ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்களை படுகொலை செய்த சாதனையை ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் அரசு நிலைநாட்டிக் கொண்டது. தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் மோதல்களை திட்டமிட்டு ஏற்படுத்தியது இவ்வரசு. 1985ம் ஆண்டு கிழக்கிலங்கையில் தமிழ், முஸ்லீம் க்லவரத்தை ஏற்படுத்துவதற்கு கொழும்பிலிருந்து பல பஸ் வண்டிகளில் காடையர்களை அனுப்பி செயற்பட்டது. இப்படி அனுப்பப்பட்டவர்களே காரைதீவுக் கிராமத்தில் கலவரங்களை உண்டுபண்ணினர் என்பது பலருக்கும் தெரிந்த விடயமாகும்.

## இலங்கை - இந்திய உடன்படிக்கை:

இவ்வகையில் யுத்தத்தை முன் எடுப்பதில் நாட்டின் எல்லா வளங்களையும் பயன்படுத்தினாலும் யுத்தத்தின் எதிர்பார்ப்புகளை அடைய ஜே.ஆர்.ஜயவர்த்தனாவால் முடியாமல் போய்விட்டது. தமிழ் இளைஞர்களின் எதிர்த்தாக்குதல்களை முறியடிக்க முடியாமல் போய்விட்டது. இந்நிலையில் இராணுவரீதியல் அடைந்த தோல்விகளும் இந்தியாவின் தலையீடும் சர்வதேசரீதியிலான தாக்கமும் யுத்தத்தை நிறுத்த வேண்டிய வற்புறுத்தலுக்கு ஜே.ஆர்.ஜயவர்த்தனாவை உட்படுத்தியது. இச் சூழ்நிலையில் மாற்றுவழிகள் எதுவுமற்ற ஜே.ஆர்.ஜயவர்த்தனா இந்தியாவின் உதவியை நாடி இலங்கை - இந்திய உடன்படிக்கையை 1987இல் ஏற்படுத்திக் கொண்டார். இவ்வுடன்படிக்கையின் மூலம் வட கிழக்கில் மாகாண சபைகள் அமைக்கப்பட்டாலும அவற்றுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரங்களை பகிர்ந்தளிக்காமையினால் அம்மாகாணசபைகள் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியாமல் போயின.

## பிரேமதாசாவின் சாயம்:

1989இல் பிரேமதாச ஜனாதிபதியாகிய அன்று முதல் இந்த மாகாணசபையை செயலிழக்கச் செய்வதிலும் இந்திய இராணுவத்தைத் திருப்பி அனுப்புவதிலும் தான் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டு வந்துள்ளார். இலங்கையில் அமைக்கப்பட்ட 8 மாகாண சபைகளில் வடகிழக்கு மாகாண சபை மட்டுமே ஐக்கியதேசியக் கட்சியை ஆளும் கட்சியாகக் கொள்ளாத மாகாணசபையாகும். இந்திய இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல்களினால் பலமிழந்திருந்த விடுதலைப் புலிகளுக்கு ஆயுதரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலம் பெறுவதற்கான ஒரு வாய்ப்பை பிரேமதாச ஏற்படுத்தினார். இதன் மூலம் இந்திய இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கும் வடகிழக்கு மாகாணத்தில் அதிகாரத்தில் இருந்தவர்களை வெளியேற்றுவதற்கும் விடுதலைப் புலிகளின் உதவியைப் பெற்றுக் கொண்டார். எவ்வித மாற்று நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் வடகிழக்கு மாகாண சபையில் பிரேமதாசாவினால் கலைக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் மீண்டும் அப்பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வின் மூலமே தீர்வு காணமுடியும் எனவும் தமிழர்களும் இந்நாட்டின் பிரஜைகள், எனவே அவர்களின் உரிமைகளை இந்நாட்டின் பெரும்பான்மையினர் அங்கீகரித்து இந்நாட்டில் பல்லினப் பாங்கான சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றெல்லாம் மேடைகள் தோறும் இடைவிடாது முழக்கம் செய்து வந்தவர் இவர். ஆனால் அதே நேரத்தில் இந்த இனவாத யுத்தத்தை தீவிரப்படுத்துவதிலும் அவரின் முன்னைய தலைவர்களை விட தீவிரமாகச் செயற்பட்டார். சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான தனது செயற்பாடுகளை ஒருபடி முன்னோக்கி செயற்படுத்தினார். பௌத்த சாசன அமைப்பொன்றை ஏற்படுத்தி அதைத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டார். இலங்கையில் தமிழருக்கெதிராக செயற்படுவதில் முன்னணியில் திகழ்ந்த மதகுருமார்களைக் கொண்ட ''அதி உத்தம பௌத்த குருமார் ஆலோசனை அமைப்பு'' ஒன்றை அமைத்தார்.

இவர்களின் அனுமதியுடனே நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எடுக்கப்படும் என்ற வாக்குறுதியையும் அளித்தார். இவ்வகையில் பௌத்த சக்திகளிடம் சரணடைந்து கொண்ட பிரேமதாசாவுக்கு இந்த இனவாத யுத்தத்தை முன்னெடுத்துத் தீவிரப்படுத்துவதற்கான அனுமதி மட்டுமே கிடைத்தது. எனவே இனவாதப் பிரச்சினை தொடர்பாக இவரது செயற்பாடுகள் ''பிள்ளையைக் பலமாகக் கிள்ளிவிட்டு தொட்டிலை மெதுவாக ஆட்டும் '' பாணியில் தான் அமைந்திருந்தது.

எல்லாத் தமிழர்களும் பயங்கரவாதிகள் என எண்ணும் அளவுக்கு தென்னிலங்கையில் தமிழின எதிர்ப்பு தூண்டிவிடப்பட்டதோடு அப்பாவி மலையக மக்களின் கைதுகளும் பரவலாக இடம் பெற ஆரம்பித்தன. இவரது இராணுவ நடவடிக்கையின் விளைவாகத்தான், மிகவும் அதிகளவான தமிழ் முஸ்லீம், சிங்கள மக்கள் நிரந்தரமாக அகதிகளாக வருடக்கணக்கில் வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இத்தகைய நிலைமைகள் தொடர்கையில் தான் ஜனாதிபதி பிரேமதாச கொலை செய்யப்பட்டு டீ.பி.விஜேதுங்க ஜனாதிபதியாக வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எவ்வித புத்திசாதுரியமும் அற்றவாரக் காணப்படுகின்ற ஜனாதிபதி விஜேதுங்க இனவாத ரீதியில் தனது முன்னைய இரு தலைவர்களையும் விட ஒருபடி முன்னனிற்பவராகவே காணப்படுகின்றார். தனது கட்சியின் கருத்தியல் கோட்பாடான பேரினவாத சுபாவத்துடன் கண்டியப் பிரதேச, மலைநாட்டுச் சிங்கள இனவாதத்தை

→3



# “அரசுடன் சேர்ந்திருப்பவர்கள் அடையாளம் காட்டுவதில் ஈடுபட்டார்கள்”

ஜோசப் பரராஜசிங்கம்

**அரசின் மனித உரிமைமீறல்கள் தொடர்பாகத் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்திருக்கிறீர்கள். கிழக்கின் இன்றைய நிலை எவ்வாறுள்ளது?**

காணாமல் போகும் இளைஞர்களின் எண்ணிக்கை இப்போது குறைந்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். 90 ஜூன் 23 முதல் நவம்பர் வரை 6000க்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருக்கிறார்கள். இவ்வாறு காணாமல் போனவர்களில் 90 வீதமானவர்கள் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்கள். சத்துருக்கொண்டான், பனிச்சையடி, கொக்குவில், பிள்ளையாரடி போன்ற இடங்களில் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்களின் போது பெருமளவில் பெண்களும், பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதனை நான் வெளியுலகிற்கு கொண்டு வர ஆரம்பித்தற்குப் பின்னர் வந்தாறுமூலை, சித்தாண்டி, கொக்கட்டிச்சோலை, மைலந்தனை போன்ற சில சம்பவங்களே பெரியளவிலான படுகொலைகளாக நடைபெற்றுள்ளன. எனினும் நான் தொடர்ச்சியாக இவற்றிற்கெதிராகக் குரல் கொடுத்து வந்ததனால் இது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று நினைக்கின்றேன்.

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். கொக்கட்டிச்சோலை, மைலந்தனைச் சம்பவங்கள் தொடர்பான என்னுடைய வற்புறுத்தலின் பேரில் தான் ஜனாதிபதி விசாரணைக் கமிஷனை நியமித்தார். இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துக்குமான இயக்கம் (மேர்ஜ்) இந்த வழக்குகளுக்கான சட்டத்தரணிகள், சட்டத்தரணிகளுக்கான செலவு மற்றும் சகல உதவிளையும் செய்து தந்திருந்தது. மற்றவர்கள் எல்லோரும் கைவிரித்த நேரத்தில் மேர்ஜ் நிறுவனம் கைகொடுத்து உதவியதற்காக நான் அதற்கு நன்றி கூற வேண்டும்.

**இதே காலத்தில் பெண்கள் பெருமளவு பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதாகப் பேசப்படுகிறதே.:.**

ஓம். வாழைச்சேனை, பேய்த்தாழை போன்ற பகுதிகளிலிருந்து இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. பாலியல் பலாத்காரச் சம்பவத்தில் பொலிஸாரே அதிகளவில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும் பயம் காரணமாக அவர்கள் இதுபற்றி முறைப்பாடு செய்வதைத் தவிர்த்திருக்கிறார்கள்.

**இளைஞர்கள் காணாமல் போனதன் பின்னணியில் தமிழ்க் குழுக்களும் இருந்திருக்கின்றன என்பது உண்மைதானா?**

உண்மைதான். அரசாங்கத்துடன் சேர்ந்து வேலை செய்பவர்கள் அடையாளம் காட்டுவதில் ஈடுபட்டார்கள். வெளிப்படையாகவே ரெலோ, புளொட் போன்றவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தனர்.

**மட்டக்களப்பில் பரவலாக உங்களுக்கு ஆதரவு இருப்பதாகப் பேசப்படுகிறது. நீங்கள் அரசின் மனித உரிமை மீறலைக் கண்டித்து, காணாமல் போன இளைஞர்கள் தொடர்பாகக் குரல் எழுப்பியதாலும் அது தொடர்பான வேலைகளை மேற் கொண்டதாலும் கிடைத்த தனிப்பட்டரீதியான ஆதரவா? அல்லது கூட்டணிக்குக் கிடைத்த ஆதரவா?**

இரண்டையும் சேர்த்துச் சொல்லலாம் என நினைக்கின்றேன். கூட்டணியின் ஆதரவு அடிப்படையாக இருக்கிறது. சிலர் தனிப்பட்ட முறையில் என்னை ஆதரிக்கிறார்கள். ஆனாலும் தனிப்பட்ட முறையில் எனக்குக் கிடைக்கும் செல்வாக்கை விட கட்சியின் செல்வாக்கு தான் எனக்குப் பெருமளவில் ஆதரவைத் தேடித் தந்தது. அது தான் முக்கியம் என்று கருதுகிறேன்.

**கொக்கட்டிச்சோலை, மைலந்தனைப் படுகொலைகள் தொடர்பாக ஆணைக்குழு நியமிக்கும்படி கோரி இவ்விடயங்களை முன்னுக்குக் கொண்டு வந்தீர்கள். ஆனால் இதே போல் படுகொலை செய்யப்பட்ட முஸ்லீம் மக்கள் தொடர்பாக நீங்கள் எதுவித அக்கறையையும் காட்டவில்லையே?**

முஸ்லீம்கள் கொல்லப்பட்ட போது நான் வன்மையாகக் கண்டித்திருக்கிறேன்.

**நீங்கள் கண்டித்திருக்கிறீர்கள். ஆனால் தீவிரமான அக்கறை காட்டவில்லைத்தானே?**

காரணம் என்னவென்றால் முஸ்லீம்களது நலனைப் பாதுகாக்க அமைச்சரவையில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் இருந்தார்கள். ஆனால் தமிழ் மக்கள் தொடர்பாக அக்கறை காட்ட எவரும் இருக்கவில்லை என்பது ஒரு விடயம். மற்றையது பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்டிருந்த சம்பவங்கள் தொடர்பாகவே ஆணைக்குழு நியமிக்கவோ, அவற்றை விசாரணை செய்யும் படியோ அரசைக் கோரவோ முடியும். மற்றையவர்கள் சம்பந்தப்பட்டதை ஆணைக்குழு நியமித்து விசாரணை செய்யும்படி அரசைக் கோர முடியாதல்லவா?

**மட்டக்களப்பில் கூட்டணி வேட்பாளர் பட்டியல் தெரிவின் போது சாதி, மதம் போன்ற விடயங்களின் ஆதிக்கம்/ குறுக்கீடு இருந்ததாகப் பேசப்பட்டதே. அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

கூட்டணியின் மட்டக்களப்பு வேட்பாளர் பட்டியல் தெரிவில் சாதி,மதம் போன்றவற்றின் குறுக்கீடு இருந்ததாகக் கூறமுடியாது. அது தவறு. கட்சியின் வேட்பு மனுதாரர் தெரிவு தொடர்பான குழு பரிசீலனை செய்து எடுத்துக் கொண்ட முடிவே அது.

**தமிழ் மக்களுடைய நாற்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாராளுமன்ற அரசியல் அனுபவங்களுக்குப் பின்னும் இவ்வழிமுறையூடாக எதனையாவது சாதிக்கலாம் என எண்ணுகிறீர்களா?**

பாராளுமன்றம் என்பது ஒரு நாட்டினுடைய பிரதான கேந்திர ஸ்தானம். எந்த ஒரு நாட்டிலும் பாராளுமன்றமே நாட்டை ஆட்சி செய்கிறது. இதில் நாம் அங்கம் வகிப்பதன் மூலம் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது போனாலும் வேறு சில விடயங்கள் தொடர்பாகவாவது கவனம் எடுக்கலாம்.

உதாரணமாக பாராளுமன்ற பிரதிநிதி என்ற வகையில் தான் மனித உரிமை மீறல் பற்றிய விடயங்களில் அக்கறை செலுத்தக் கூடியதாக இருக்கிறது. தவிர விதவைகள், ஆறு இலட்சம் அகதிகள் ஆகியோரது பிரச்சினைகளைக் கவனிக்கலாம். இதற்குமப்பால் ஒரு கட்சி என்ற அடிப்படையில் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களது பிரச்சினை பற்றி ஆராயும் போது அவற்றுக்கு உந்து சக்தியாக இருக்கலாம்.

## 17 வருட பயங்கரம்...

யும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு செயற்படுபவராகவே காணப்படுகின்றார். இலங்கை என்ற ஒரு பல்லினப் பாங்கான நாட்டின் ஜனாதிபதி என்பதற்குப் பதிலாக சிங்களவரின் ஜனாதிபதியாகவே இவர் செயற்படுகின்றார்.

### மலையக மக்களின் பிரச்சினைகள்

மலையக மக்களின் பிரச்சினைகள் ஒரு தொடர்கதையாக முடிவுறாத ஒன்றாகவே இருக்கின்றது. சம்பள உயர்வு, காணிப் பங்கீடு, தொழில் வாய்ப்புகள், கல்விச் சேவைகள், சுகாதார சேவைகள் போன்ற எல்லாத் துறைகளிலும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றார்கள். 1977ம் ஆண்டுக்கு முன் மலையக மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகள் எல்லாம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. கடந்த 17 வருடங்களாக ஐ.தே.கட்சியின் வெற்றிக்காக மலையக மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்த இ.தொ.காங்கிரசும், தொண்டமானும் மலையக மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தது வேறொன்றுமில்லை ஐ.தே.கட்சி தான் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுத்தது என்று கூறி வாக்குக் கேட்கின்றார் தொண்டமான். 94 ஆயிரம் பேருக்கு பிரசாவுரிமை வழங்கியது சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தினாலேயே ஒழிய தொண்டமானின் திறமையினால் அல்ல. கடந்த 16 வருடங்களாக தொண்டமானுடன் ஐ.தே.கட்சி ஒன்றிணைந்து மேற்கொண்ட இனவாத அடக்கு முறையினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மலையகத் தமிழர்களேயாவர். தமிழர்களுக்கெதிரான இனக்கலவரங்களினால் ஏற்பட்ட உயிரிழப்புகள், பொருளிழப்புகள் மட்டுமல்லாமல் திடீர் கைதுகள், இனவாதப் பிரச்சாரம் போன்ற செயற்பாடுகளின் மூலம் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியாத ஒரு நிலைமையை ஏற்படுத்தியது ஐ.தே.கட்சி - தொண்டமான் கூட்டாட்சியே ஆகும்.

இவ்வகையில் இனவாத அடக்குமுறையை வரவழைப்பதில் ஐ.தே.கட்சி அரசுக்குப் பேருதவி புரிந்ததன் மூலம் மக்களைப் பிரச்சினையில் ஆழ்த்தி விட்டு பிரச்சினையை ஏற்படுத்தியவர்களுடன் மோதாமல் கூட்டாகக் கும்மாளம் அடித்துக் கொண்டு மறுபுறத்தில் மக்களைப் பார்த்து முதலைக் கண்ணீர் வடிப்பது தொண்டமானுக்குக் கைவந்த கலையாகும்.

கடந்த 17வருட ஐ.தே.கட்சியின் ஆட்சியில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தொண்டமான் இவ்வரசுடன் எத்தனை முறை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். கடந்த ஐம்பது வருட அவரது அரசியலில் மலையக மக்களுக்குப் பல உரிமைகளைப் பெற்றுக் கொடுத்திருப்பதாகக் கூறும் இவர் பெற்றுக் கொடுத்த உரிமை ஒன்றையேனும் பெயர் குறிப்பிட்டு கூற இவரால் முடியுமா? ஏனென்றால் அப்படிப் பெற்றுக் கொடுத்தது எதுவுமில்லை. தோட்டத் தொழிலாளர்களின் குடியிருக்கும் வீட்டையும், பயிர்செய்யும் காணித் துண்டையும் அவர்களுக்கே சொந்தமாக்கி விட்டேன் எனப் பட்டப் பகலில் பொய்கூறி வாக்குக் கேட்குமளவிற்கு மக்களை ஏமாற்றிப் பழகிவிட்ட தொண்டமானுக்கு தமது அறிக்கைகளில் செய்யாதவற்றையெல்லாம் செய்ததாகக் கூறுவது ஒன்றும் கடினமல்ல.

### 1994ம் ஆண்டின் பொதுத் தேர்தல்

இத்தகைய இனவாத சூழ்நிலையில் தான் இந்நாட்டுத் தமிழ் மக்கள் ஒரு தேர்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. கடந்த காலங்களில் ஐ.தே. கட்சி - இ.தொ.கா உறவும், ஐ.தே.கட்சியின் ஆட்சியைப் பாதுகாப்பதில் மலையகத் தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவும் ஐ.தே.கட்சியின் பேரினவாதப் போக்குகளை ஒரு துளியேனும் மாற்றிவிடவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்ற விடயமாகும்.

வட, கிழக்கு தமிழ் மக்களின் தியாகப் போராட்டத்தின் மூலம் தமிழ் மொழியையும் அரசகரும மொழியாக நிலை நிறுத்தினாலும், நடைமுறையில் இது இன்னும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கின்றது. அந்தளவுக்கு இவ்வரசில் இனவாதம் வேரூன்றியிருக்கின்றது.

கடந்த இரு வருடங்களாக பொதுஜன ஐக்கிய முன்னணியானது தாராள ஜனநாயகவாதத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றதையும், இனவாத யுத்தத்தை எதிர்க்கும் தமது பிரச்சாரங்களை அதிகரித்துக் கொண்டு செல்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் விளைவாக தீவிர சிங்கள இனவாதிகள் இம் முன்னணியில் இருந்து விலகிச் செல்கின்றமையையும் பார்க்கிறோம். திரைமறைவில் நடக்கின்ற பேச்சுவார்த்தைகளும், செயற்பாடுகளும் யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களின் சமஉரிமையினை அங்கீகரித்து அரசியல்ரீதியாக இப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற அவசரத் தேவையை இவர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரிகின்றது என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

இந்த நாட்டின் இனவாத முரண்பாட்டை அரசியல்ரீதியில் தீர்க்கக்கூடிய இறுதிச் சந்தர்ப்பமாகவே இத் தேர்தல்கள் அமைந்துள்ளன. இலங்கையில் இனவாதப் பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டுமானால் அது இலங்கையின் ஜனநாயக மரபுகளை நிலைநாட்டுவதன் மூலமும், பல்லின ஜனநாயகத்தை அறிமுகம் செய்வதன் மூலமுமே இயலும்.

எனவே கடந்த 17வருட அநுபவங்களை அடிப்படையாகவும், அரசியற் கட்சிகளின் நிலைப்பாடுகளை வழிகாட்டியாகவும் கொண்டு தீர்க்கமான சிந்தனையுடனும் எதிர்காலத் தேவைகளின் அடிப்படையிலும் செயற்படுவது தவிர்க்க முடியாததாகும்.



# தொண்டாவின் உள...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கு இன்றுவரை இயங்குவதற்கு சொந்தமாக ஒரு தலைமைச் செயலகம் இல்லை. இன்றுவரை இ.தொ.காவின் தலைமையகம் வாடகைக் கட்டிடம் ஒன்றிலேயே இயங்கி வருகிறது.

இவ்வளவிற்கும் இ.தொ.கா. கடந்த பல வருடங்களாக தனது உறுப்பினர்களாக உள்ள 1,55,000 தோட்டத் தொழிலாளரிடம் சந்தாப் பணமாக மாதாந்தம் ஆளுக்குத் தலா 20 ரூபா வீதம் ஏறத்தாழ 3.6 கோடி ரூபாய்களை வருடாந்தம் அறவிட்டு வரும் ஒரு மாபெரும் தொழிற்சங்க இயக்கமாகும். இத்துடன் தேர்தல் காலத்தில் கட்சிக்குக் கிடைக்கும் இலட்சக்கணக்கான ரூபாய்களும் மற்றும் தொழிற்சங்க அபிவிருத்திக்காக கிடைக்கும் வெளிநாட்டு நிதிகளும் இ.தொ.காவிற்கு உண்டு.

எனினும் இ.தொ.காவிற்கு இன்று அதன் தலைமையகம் இயங்க சொந்தமாக ஒரு கட்டிடம் இல்லை. 83இல் மிகச் சிறிய அளவில் ஆரம்பித்த கட்சியான முஸ்லீம் காங்கிரஸ் கூட இன்று கொழும்பின் மையப்பகுதியில் தார் உஸ்ஸலாம் எனும் வசதியான தலைமைக் காரியாலயத்தை சொந்தமாகக் கொண்டு இயங்கி வருகிறது. முஸ்லீம் காங்கிரஸ் இ.தொ.காவைப் போல் தன் உறுப்பினரிடம் சந்தா அறவிடும் ஒரு ஸ்தாபனம் அல்ல.

அப்படியானால் இ.தொ.கா சொந்தமாக கட்டிடம் அமைத்திட ஏன் முடியவில்லை?

1989இல் இ.தொ.கா தலைமைப்பீடம் கிரீன்பாத்- பிளவர் றோட் சந்தியில் அமைந்துள்ள 56 பேச் காணியொன்றை வாங்கி அங்கு ஸ்தாபனத்தின் தலைமைப்பீடத்தை நிறுவலாம் எனத் தீர்மானித்தது. இந்தக் காணியில் இருந்த பழைய கட்டிடத்தில் இ.தொ.காவின் தலைமையகம் நீண்ட காலமாக இயங்கி வந்தது.

கட்டிட வல்லுனர்களின் மதிப்பீட்டின்படி தலைமையகத்தை நிர்மாணித்து முடிப்பதற்கான செலவு 4 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டு அம்மதிப்பீடு இ.தொ.கா தலைமைப்பீடத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.


இதில் 2கோடி ஸ்தாபன நிதியத்திலிருந்தும் (Union fund) மீதி இரண்டு கோடி வங்கிக் கடன்களினூடாகவும் பெறப்படலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாக நின்றது. நிலத்தில் புதர் மண்டிப் பெருகக் கட்டிடமோ கட்டாக்காலி நாய்கள், வெளவால்கள் மற்றும் இராப்பிராணிகளின் வதிவிடமாயிற்று.

ருந்து கோரி அதை ஆராய்ந்த பின்னரே உரிய தொகையை கட்டம் கட்டமாகக் கொடுப்பது வழக்கம். ஆகவே இ.தொ.கா.தலைமைப்பீடம் கே.கணேந்திரன் அசோஸியேட்ஸ் என்னும் நிறுவனத்திடம் கட்டிடத்தை பூர்த்தியாக்கும் விடயத்தை ஆராய்ந்து ஒரு அறிக்கை தயாரித்து தரும்படி பணித்தது.

## 0 கட்டிடத்துக்கு ஒதுக்கிய நிதி எங்கே?

## 0 தொண்டாவுக்கும் அநுராவுக்கும் உள்ள உறவென்ன?






இவ்வறிக்கையை தயாரிப்பதில் சம்பந்தப்பட்ட பொறியியலாளரை நாம் தொடர்பு கொண்ட போது நமக்குக் கிடைத்த தகவலின் படி Feasibility study for completing the construction for the Headqhartors of the C.W.C.எனப் பெயரிட்ட அந்த அறிக்கை துரிதமாகவும் விரிவாகவும் பூர்த்தி செய்யப்பட்டு 5.8.1992 இலேயே இ.தொ.கா தலைமைப்பீடத்திடம் வழங்கப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அறிக்கை வங்கிக்கடன் பெறுவதற்கு ஒரு அடிப்படையாகவே தயாரிக்கப்பட்டது என்றும் இவ்வாறான வல்லுனர் அறிக்கையை ஆராயாமல் வங்கிகள் கட்டிட வேலைகளுக்குக் கடன் வழங்க மாட்டா என்பதையும் அவர் உறுதி செய்தார்.

# கட்டிட நிதியில் ...

2.5கோடிக்கு முன் குறிப்பிட்ட 56 பேச் காணியும் வாங்கப்பட்டது எனவே தலைமையகத்தின் மொத்தச் செலவு 6 5கோடி ரூபாய்.

நிர்மாண வேலைகள் 89இல் ஆரம்பமாயின. மந்தகதியிலேயே நடைபெற்ற வேலைகள் 92ஆண்டு ஆரம்பத்தில் ஸ்தம்பிதமடைந்து விட்டன. கட்டிடம் அரைகுறை

இந்நிலையில் இ.தொ.கா. தலைமைப்பீடம் மீதி வேலையை முடிக்க வங்கிக் கடன் பெறப்பட வேண்டும் என்பதற்காக ஒரு கட்டிட வல்லுனர் நிறுவனத்தை அணுகிற்று. இது போன்ற பாரிய தொகைகள் சம்பந்தப்பட்ட கட்டிட விடயங்களில் கடன் கொடுப்பதற்கு அடிப்படையாக வங்கிகள் Feasibility study என்னும் ஒரு கட்டிட வல்லுனர் அறிக்கையினை கடன் கேட்பவரிடமி

கட்டிடத்துக்காக ஆரம்பத்தில் போடப்பட்ட திட்டத்துக்கும் இப்போதுள்ள திட்டத்துக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு என்றும் ஆரம்பத் திட்டம் அடியோடு மாற்றப்பட்டு விட்டது என்றும் தெரிய வருகிறது.

92இன் பின் கட்டிட நிர்மாணத்தினை பூர்த்தி செய்யவென இலங்கை வங்கியிடமிருந்து கணிசமான தொகைகள் கடனாகப் பெறப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. இந்தக் கடன்களுக்கு உரிய வட்டியாக பாரிய தொகைகள் இ.தொ.கா நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.


ஆனால் கட்டிட... அதே நிலையிலே... டைந்து அநாதர... எடுக்கப்பட்டதா... கடன்களுக்கான... தொகையை ஈடு... வேனும் கட்டிட... தியை வாடை... என ஒருமுறை... தில் பேசப்பட்ட... கட்டிடத்தின் ஒரு... வாடகைக்கு வி... இல்லை என்பத...

## ● சந்தாப்பணமும் சுருட்டப்பட்டிருக்கிறதா?

## ● நிதியறிக்கை சமர்ப்பிக்கப்படாததன் மர்மம் என்ன?

படங்களும் தகவ...

# ...ழல் – 1



கட்டி முடிக்கப்படாத கட்டிடம்

அரசுடமையாக்கப்பட்ட நிறுனங்களை 89இற்குப் பின்னர் அரசு தனியார் கம்பனிகளுக்கு விற்கத் தொடங்கிய போது எலிபன்ட் ஹவுஸ் நிறுவனத்தை ஜோன்கீல்ஸ் கம்பனி வாங்கிற்று. தனது முகவர்களையே எலிபன்ட் ஹவுஸ்ஸிற்கு பொறுப்பாக நியமித்து பழைய நிர்வாகத்தை ஜோன்கீல்ஸ் மாற்ற முற்பட்ட வேளையில் திரு.தொண்டமான் அனுரா குணசேகரவின் சார்பில் தலையிட்டு ஜோன்கீல்ஸ் நிறுவனத்தின் தலைவர் கந்தையா பாலேந்திராவுடன் பேசி திரு.குணசேகரா தொடர்ந்தும் புதிய நிர்வாகத்தில் பங்கு பெற வழிசெய்தார்.

தொண்டாவிற்கும் - திரு.குணசேகராவிற்கும் இருந்த நெருக்கமான கொடுக்கல் வாங்கல் விடயங்களின் காரணமாகவே தொண்டர் இதைச் செய்தார் என விஷயமறிந்த கொழும்பு வர்த்தக வட்டாரங்கள் கூறுகின்றன.

எனவே அனுரா குணசேகராவின் நிறுவனத்திற்கு இ.தொ.கா தலைமைச் செயலகக் கட்டிடத்திற்கான கொந்துராத்துக் கொடுக்கப்பட்டதில் வியப்பில்லை.

முறைப்படி பாரிய தொகைகள் சம்பந்தப்பட்ட இப்படியான விடயங்களில் பல நிறுவனங்களுடைய கட்டிட வரைவுகள், திட்டங்கள் மற்றும் அதை முடிக்கவென அவை எதிர்பார்க்கும் செலவு மதிப்பீடு ஆகியவற்றை சீர்தூக்கிப் பார்த்த பின்னரே கொந்துராத்து வேலை ஒப்படைக்கப்படவேண்டும்.

இ.தொ.காவின் தலைமைச் செயலகக் கட்டிட நிர்மாண வேலைக்கான கொந்துராத்து திரு.அனுரா குணசேகராவின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது எந்த அடிப்படையில்?

அனுரா குணசேகராவின் கட்டிட நிறுவனம் வழங்கிய நிர்மாணத்திற்கான வரைவுகளும். உத்தேச தொகை மதிப்பீடும் இ.தொ.காவின் நிதிக்குழு(?) வினால் அல்லது உள்ளகக் கணக்காய்வாளரால் Internal Auditor - சரிபார்க்கப்பட்டனவா?

கே.கணேந்திரன் அசோசியேட்ஸ் தயாரித்த Feasibility study ஐ இ.தொ.காவில் யாராவது கண்டதுண்டா?

92ம் ஆண்டிலிருந்த கட்டிடத்தின் பேரில் இலங்கை வங்கியிடமிருந்து கடனாக எடுக்கப்பட்ட பணம் எங்கே?


இவையெல்லாம் ஒருபுறமிருக்க இ.தொ.காவின் வருடாந்த நிதி அறிக்கைகூட கடந்த ஐந்து வருடங்களாக இ.தொ.காவின் பொதுச்சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த லட்சணத்தில் மாதாந்த சந்தாவிற்கு மேலாக தொழிலாளரிடமிருந்து மேலதிக கட்டிட நிதி ஒன்றும் அறவிட வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது எனினும் பின்னர் அந்த எண்ணம் கைவிடப்பட்டது.

இந்த நிலைமையில் எல்லா நெருக்கடிகளையும் சமாளிக்க உள்ள ஒரே வழி ஐ.தே.கட்சியை இறுகப் பற்றுவதுதான் என தொண்டமான் எடுத்த முடிவில் ஆச்சரியம் இல்லை. தொண்டமானின் தனிப்பட்ட நலன்களும் ஐ.தே.கட்சியின் நலன்களும் எப்படி இறுக்கமாகப் பிணைந்துள்ளன என்பது பற்றி அடுத்த இதழில்.

# ...கயாடலா?

...92இல் இருந்த ...ப இன்றும் பாழ ...க நிற்கிறது.



...ம் கட்டுரையும்: சுப்பு பஞ்சமன் இரத்தினம் ...ம் மலைஞானி ...ன்முக வடிவேல்

...கூறப்படும் ...வட்டித் ...ய்யும் முகமாக ...ின் ஒரு பகு ...கு விடலாம் ...லைமைமட்டத் ...வும் ஆனால் ...லையைக் கூட ...ம் நிலையில் அவ்வெண்ணம் கைவிடப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்தக் கட்டிட வேலையில் சம்பந்தப்பட்டிருந்த நிறுவனம் தொண்டமான் அவர்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவரான திரு அனுரா குணசேகரவிற்குச் சொந்தமானதாகும்.

யார் இந்த அனுரா குணசேகர?

புறக்கோட்டையில் துமிந்த- எரந்த (Dumindha - Erandha) என்ற ஒரு பாரிய அச்சகம் வைத்திருப்பவர். ஐ.தே.கவிற்கு நெருங்கியவர். ஐ.தே.கவின் பிரசுர வேலைகள் பலவற்றைப் பெற்றுச் சம்பாதித்தவர். அரசுடைமையாக்கப்பட்ட எலிபன்ட் ஹவுஸ் நிறுவனத்தின் Competent Authority ஆக ஐ.தே.க அரசினால் இவர் நியமிக்கப்பட்டிருந்தார். எலிபன்ட் ஹவுஸ் தொழிலாளரிடையே பலம் பெற்றிருந்த தொழிற்சங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். இந்தப் பின்னணியில்தான் தொண்டமானும் திரு. அனுரா குணசேகராவும் நெருங்கிய நண்பர்களாயினர்.

# எங்க பாட்டன் சொத்து

இ.தொ.கா. தலைமையகக் கட்டிட நிதிதொடர்பான ஊழல்கள் பற்றி அவ்வப்போது 'கிசுகிசு'க்கப்பட்ட போதும் பெரிய உண்மைகள் முற்றாக வெளிவரவில்லை. இக்கட்டடத்திற்கான மொத்தச் செலவு எவ்வளவு? கொடுத்துள்ள தொகை எவ்வளவு? யார் மூலம் கொடுக்கப்பட்டது? அத்றகான பற்றுச்சீட்டுக்கள் பெறப்பட்டனவா? என்பது போன்ற விபரங்கள் இ.தொ.கா.உத்தியோகத்தர் குழுவுக்குத் தரப்படவில்லை. நிர்வாக முன்பு செயல்பட்டு வந்த நிதிக்குழுவும் இப்போது கலைக்கப்பட்டு விட்டது.

எயார் லங்கா நிறுவனத்தின் சென்னை முகவர்களாக இருப்பவர்கள் ஆறுமுகம் தொண்டமானும் அவரைச் சார்ந்தவர்களுமே. எயார் லங்கா நிறுவனத்தின் பம்பாய் முகவர்களாக இருப்பவர்கள் தொண்டமானின் பேத்தி அனுசாந்த மோகனும் அவரைச் சார்ந்தவர்களுமே.

தினருக்கு உயர்ந்த விலையில் வாடகைக்கு கொடுத்து விட்டார்கள். கொழும்பு றேஸ் கோஸ் அவெனியூவில் இருக்கும் தொண்டமானின் இருப்பிடத்திற்கும் இ.தொ.கா. நிதியிலிருந்தே பெருமளவு வாடகை வழங்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொண்டமான் ஃபவுண் டே ன் (Thondaman Foundation)கதையோ தனி. இ.தொ.கா. பணம் 10லட்சமும் காலம் சென்ற ஜனாதிபதி பிரேமதாசா வழங்கிய 1லட்சமும்




சபையினருக்கும், தேசிய சபையினருக்கும் இது பற்றி ஒன்றுமே தெரிவிக்கப்படவில்லை. காங்கிரஸிற்குச் சொந்தமான கட்டிடங்கள் யார் பெயரில் வாங்கப்பட்டுள்ளன? யார் பெயரில் உறுதிகள் உள்ளன? என்ற விபரங்கள் எவருக்குமே தெரியாது. இப்போது கட்டிட நிதிக்கென ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து பெருந்தொகையான பணம் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக இ.தொ.கா.வின் அதிருப்தியாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். செயலாளராக தொண்டமானின் பேரன் ஆறுமுகம் தொண்டமான் நியமனமான பிற்பாடு இ.தொ.கா.வின் நிதி தொடர்பான எல்லா விஷயங்களுமே பாட்டனாலும் பேரனாலுமே கவனிக்கப்படுகின்றன. காசோலைகளில் தொண்டமானும் அவருடைய பேரனும் மட்டுமே கையெழுத்திடுகிற நடைமுறை இப்போது ஏற்பட்டுவிட்டது. ஏறக்குறைய முப்பதாண்டுகளாகக் காலஞ்சென்ற விஜயசுந்தரம் மற்றும் அண்ணாமலை அவர்களுமே நிதிக் காரியதரிசிகள் என்ற வகையில் இறுதிக் காசோலைகளில் கையெழுத்திட்டிருந்தனர். இப்பொழுது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொண்டமானின் பேரன் உள்ளே நுழைந்த பிற்பாடு ஏற்பட்டுள்ளன.

இ.தொ.காவால் நிறுவப்பட்டுள்ள காங்கிரஸ் தொழில் நிறுவனம் (Congress Labour Foundation) சர்வதேச நிதியுதவி பெற்றதாகும். காங்கிரஸ் தொழில் நிறுவனத்திற்கு மாதந்தோறும் லட்ச ரூபாவுக்குமேல் இ.தொ.கா. நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் கணக்குகளும் நிர்வாக சபைக்கோ அன்றித் தேசிய சபைக்கோ சமர்ப்பிக்கப்படுவதில்லை. கொட்டக்கலையில் அமைக்கப்பட்டுள்ள இந்நிறுவனத்திற்கு இப்போது இயக்குனராக நியமிக்கப்பட்டிருப்பவர் வேறுயாருமல்ல ஆறுமுகம் தொண்டமான் தான். கொட்டக்கலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிறுவனமும் வங்கியில் ஈடுவைக்கப்பட்டு காசு பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த நிறுவனத்தோடு சேர்ந்து விருந்தினர்கள் தங்குவதற்காக ஒரு விருந்தினர் விடுதி(Guest house) கட்டப்பட்டது தொண்டமானும் அவருடைய பேரன் ஆறுமுகமும் இ.தொ.கா. நிதியிலிருந்து 10லட்சம் ரூபா எடுத்து இந்த விருந்தினர் விடுதியைப் சொகுசு வீடாக மாற்றிக் கட்டிவிட்டு அங்கேயே குடிபோய்விட்டார்கள் தங்களுடைய வீட்டை மகாராஜா நிறுவனத்

சேர்த்து மலையக மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்க என ஆரம்பிக்கப்பட்டதே. இத் தொண்டமான் ஃபவுண்டேஷன் மூலம் இதுவரைக்கும் ஒரு புலமைப்பரிசிலாவது வழங்கப்படவில்லை என்று தெரியவருகிறது. எனினும் தொண்டமான் பற்றிப் புத்தகம் எழுதி வெளியிடவும் மலர் வெளியிடவும் வேறும் சுய தம்பட்டப் பிரச்சாரங்களுக்காகவும், விழாக்களுக்காகவும் அவ்வப்போது லட்சம் லட்சமாக ஃவுண்டேஷன் பணம் எடுக்கப்பட்டுள்ளது.

இப்போது இ.தொ.கா. கடனில் மூழ்கியுள்ளது என்று எம்மிடம் அங்கலாய்த்த இ.தொ.கா பிரமுகர் இதுவரை காலமும் ஏன் கண்ணை மூடிக்கொண்டிருந்தீர்கள் என்று நாம் கேட்ட போது மௌனித்தார்.

தொண்டமானுக்குப் பிறகு அவருடைய பேரனும் இ.தொ.கா.வை தன்னுடைய சொத்துப் போலவே பாவிக்க முற்படுகிறார் என்றும் இந்தப் பிரமுகர் மேலும் குற்றம் சாட்டினார்.

எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது என்பதைத் தொண்டமான் அவர்கள் உணரும் காலம் விரைவில் இல்லை.

# முஸ்லீம் காங்கிரஸும் முஸ்லீம் கட்சியும்

## ஒரு அலசல்

ஓட்டமாவடி எம்.எச்.எம்.நௌபல்

இங்கு முஸ்லீம் காங்கிரஸ் என்னும் போது அதன் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களும், முஸ்லீம் கட்சி என்னும் போது முஸ்லீம் காங்கிரஸின் முன்னை நாள் தவிசாளரான எம்.எச்.சேகு இஸ்ஸதீனும் கதாநாயகர்களாக திகழ்கின்றார்கள்.

### இஸ்ஸதீன்-அஷ்ரப் மோதல்

தவிசாளரான சேகு இஸ்ஸதீனுக்கும், தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்குமிடையே மிக நீண்டகாலமாக இருந்து வந்த புகைச்சல் 1992



நவம்பரில் அட்டாளைச்சேனை கல்விக்கல்லூரி திறப்பு விழாவில் அஷ்ரஃப் ஆற்றிய உரையோடு பற்றிக் கொண்டது.

அஷ்ரஃப் ஆற்றிய உரையானது பின்வருமாறு இருந்தது; ''அடுத்த தடவையும் மேதகு (காலஞ் சென்ற) ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களே ஜனாதிபதியாக வருவதற்கு எனது கட்சியின் சார்பில் வாழ்த்துத் தெரிவிக்கிறேன்'' என்பதாகும். இதற்கு மறுப்புத் தெரிவித்து சேகு இஸ்ஸதீன் அறிக்கை விடுகையில் அடுத்த தடவையும் பிரேமதாஸ அவர்கள்தான். ஜனாதிபதியாக வர வேண்டும்மென்றும் அதற்கு முஸ்லீம். காங்கிரஸ் ஆதரவு வழங்குவது தொடர்பாக தீர்மானம் எதுவும் கட்சியினால் எடுக்கப் படவில்லையென்றும், இது அஷ்ரஃப் அவர்களின் தற்துணிவின் பேரிலேயே எடுக்கப்பட்ட முடிவு எனவே தான் கண்டிப்பதாகவும் அறிக்கைவிட ஒரு வாரத்தின் பின் இஸ்ஸதீன் முஸ்லீம் காங்கிரஸிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்.

### பிரதேசவாதம் வளர்ந்த கதை

ஏற்கனவே ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸின் உபதலைவர் பதவியோ அல்லது மூத்த துணைத்தலைவர் பதவியோ இருக்கவில்லை. சேகுஸ்ஸதீன்தான் தவிசாளராகவும் கட்சியின் இரண்டாவது தலைவராகவும் இருந்து வந்துள்ளார். இந்த நேரத்தில் அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாக கொண்ட சேகு இஸ்ஸதீன் கல்முனைக்குடியில் இருந்து ஆரம்பம் செய்யப்பட்ட முஸ்லீம் காங்கிரஸுக்கு தவிசாளராய் இருப்பதா? என்ற பிரதேசவாத சிந்தனை எழுப்பப்பட்டது.

இதனை ஈடு செய்யும் வகையில் அஷ்ரஃப் அவர்களின் மைத்துனனான பஸீல் எ.மஜீது அவர்கள் கட்சியின் உபதலைவர் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டார்.

### வட,கிழக்கு மாகாணசபை

வட,கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் 16 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் 8பேர் அம்பாறையில் இருந்தும், 3பேர் மட்டக்களப்பிலிருந்தும், 5பேர் திருகோணமலையிலிருந்தும் தெரிவானார்கள். திருமலையில் இருந்து தெரிவான 5 பிரதிநிதித்துவங்களில் ஒன்று சேகு இஸ்ஸதீனுக்கும், மற்றையது முன்னால் முஸ்லீம் காங்கிரஸ் தொழிற்சங்க அமைப்பாளரான எம்.ஏ.எம்.ஜவாட் மரிக்கார் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. இவர் மாவனல்லையைப் பிறப்பிடமாகக் கொண்டதனால் திருகோணமலை மாவட்ட முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்களிடையே அதிருப்தி ஏற்பட்டது. ஜவாட் மரிக்காருக்கு முஸ்லீம் காங்கிரஸ் மாகாணசபை உறுப்பினர் பதவியை வழங்கியதற்கான காரணம் என்னவென்றால், இந்த மாகாண சபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் இறுதி தினத்தின் முடிவு நேரம் 12.00 மணியாகும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பெஸ்டஸ் பெரேரா 12.10மணிக்கு தாக்கல் செய்ய வந்த போது நேரம் காலதாமதமானதைச் சுட்டிக்காட்டி ஏற்க கூடாதென பிரச்சினையை ஏற்படுத்தியவர் இந்த ஜவாட் மரிக்கார் அவரேதான். இதனால் தான் இவருக்கு பிராயச்சித்தமாக இப்பதவி வழங்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் இதனால் ஐக்கிய தேசியக் கட்சி போட்டி போடவில்லை.

### 'மருதூர்க்கனிக்கும்' பதவி தேவை ஏற்பட்டது

முஸ்லீம் காங்கிரஸ் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான அதன் தற்போதைய மூத்த துணைத் தலைவர் மருதூர்க்கனிக்கும் மாகாணசபை உறுப்பினர் பதவி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவரான இஸ்ஸதீன் கேட்கப்பட்ட போது இஸ்ஸதீன் விரும்பவில்லை. இங்கிருந்துதான் மோதல் ஆரம்பமாகிறது. மருதூர்க்கனி அஷ்ரப் அவர்களின் உறவினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### 18 மாத ஆட்சியில் 7 மாத பதவி வகிப்பு

வட,கிழக்கு மாகாணசபையின் 18மாத ஆட்சிக்காலத்தில் 7 மாத அமர்விலேயே முஸ்லீம் காங்கிரஸ் பங்கு பற்றியது, முஸ்லீம்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால்தான் அமர்வுகளில் கலந்து கொள்வதாக கட்சி தீர்மானம் எடுத்தது. கட்சியின் இவ்வாறான முடிவுகளினால் முஸ்லீம்களுக்கு எவ்வித சேவையையும் செய்யப்படவில்லை, ஒவ்வொரு உறுப்பினரும் தமக்கென பஜீரோக்களை மட்டும் எடுத்துக் கொண்டார்கள். மக்களுக்கு எதுவுமே நடைபெறவில்லை. இடைநடுவினிலே மீண்டும் 'மருதூர்க்கனி'க்கு பதவி வழங்குவதற்காக மட்டக்களப்பு மாவட்ட மாகாணசபை உறுப்



எஸ்.எல்.எம்.ஹனீபா

பினர் எஸ்.எல்.எம்.ஹனிபாவை இராஜினாமா செய்யுமாறு அஷ்ரஃப் வேண்டினார்.

### எஸ்.எல்.எம்.ஹனிபா இராஜினாமாவின் பின்னணிகள்

இவர் அப்போது மாகாணசபையின் ஆளுங்கட்சியுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார். முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், சபாநாயகரான இராஜகாரியர் போக்குவரத்து அமைச்சர் அபுயூசுப் ஆகியோருடன் இவர் கொண்டிருந்த நட்புகள் அஷ்ரப் அவர்கட்கு சந்தேகத்தை ஏற்படுத்தியதால் இவரிடமிருந்து இராஜினாமா கடிதத்தை பெற்றுக் கொண்டார் அஷ்ரஃப். ஆனால் இதனை இஸ்ஸதீன் ஏற்றுக் கொள்ளாததனால் சபாநாயகரும் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் இஸ்ஸதீன் அஷ்ரஃப் அவர்களின் உறவினரான மருதூர்க்கனிக்கு மாகாணசபை உறுப்பினர் பதவி வழங்குவதை விரும்பவில்லை.

### பொதுத் தேர்தலில் பின்னுள்ள ஏற்பாடுகள்


கடந்த பாராளுமன்றப் பொர்துத் தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸ் 3 ஆசனங்களையும், தேசியப்பட்டியலிருந்து தெரிவு செய்யப்பட்ட 1 ஆசனத்துடன் மொத்தம் 4 ஆசனங்களை கைப்பற்றியது.

அஷ்ரஃப் பிரேமதாசாவின் வலையில் சிக்கியதால் ஆளுங்கட்சியில் இணைவதற்கு விருப்பம் கொண்டிருந்தார். அஷ்ரஃப் அவர்களுக்கு ஒரு மந்திரிப் பதவியும் சிபார்ச செய்யப்பட்டது. இதனுடன் இஸ்ஸதீனுக்கும் தேசியப் பட்டியல் மூலமாக எம்.பி.பதவி ஏற்பாடு செய்யப்பட்ட போதும் இஸ்ஸதீன் விரும்பாததினால் கருத்து வேறுபாடுகள் அங்கும் ஏற்பட்டன.

### இஸ்ஸதீன் நீக்கப்படலும் முஸ்லீம் கட்சியின் ஆரம்பமும்

முஸ்லீம் காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்ட இஸ்ஸதீன் தம்மோடு சில மாகாண சபை உறுப்பினர்களையும் சேர்த்துக் கொண்டு ''முஸ்லீம் கட்சி'' என்ற மாதாந்த பத்திரிகையும் ஆரம்பித்தார். 8 மாத இதழ்களோடு பத்திரிகை தலைமறைவாகியது. தொடர்ந்தும் சேகு இஸ்ஸதீன் புதிய விடயங்களையோ அல்லது மாற்று சிந்தனைப் போக்குகளையோ முஸ்லீம் சமூகத்திடம் எடுத்துக் கூறாமல் அஷ்ரஃப் அவர்களின் குறைகளையும் ஆரம்ப காலத்தில் கட்சிக்குள் இடம்பெற்ற பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டுவ்திலேயே தனது கவனத்தை திருப்பிக் கொண்டிருந்தார்.

இந்த நேரத்தில்தான் பிரதேச சபைத் தேர்தல் வந்தது. இதில் இஸ்ஸதீன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு சேர்ந்து தனது சொந்த ஊரான அக்கரைப்பற்றில் சுயேட்சைக் குழுவொன்றை நிறுத்திய போதும் தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸே அங்கும் வெற்றி பெற்றது.



### இஸ்ஸதீன் யூ.என்.பியில் சங்கமாதல்

யூ.என்.பியில் இணையப்போவதை எதிர்த்து வந்த சேகு இஸ்ஸதீன் இன்று அவரே கிழக்கு மாகாணத்துக்கான பதில் அமைப்பாளராகவும் அம்பாறை மாவட்டத்தில் பிரசார வேலைகளுக்கு தலைமை தாங்குபவராகவும் காணப்படுகின்றார். எனவே இப்போது முஸ்லீம் கட்சி யூ.என்.பிக்கு உள்ளேதான். ஆளுங்கட்சியாக யூ.என்.பி வந்தால் சேகு இஸ்ஸதீனுக்கு பொறுப்புள்ள பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இரண்டு மாகாணசபை உறுப்பினர்கள் விலகலாம்

இதனையடுத்து பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் நியமனங்களில் அதிருப்தியுற்ற வடமத்திய மாகாணசபை உறுப்பினர் ராவுத்தர் நெய்னா முஹம்மது அவர்களும், மேல்மாகாண மாகாணசபை உறுப்பினர் இம்தியாஸ் ஹாஜியார் அவர்களுக்கும் அஷ்ரஃப் அவர்களுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளன. அஷ்ரஃப் அவர்களை சந்திரிகாவிடம் அழைத்துச் சென்று இந்த உடன்படிக்கை ஏற்படுவதற்கு காரணமானவர் இந்த இம்தியாஸ் ஹாஜியார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

### இன்று முஸ்லீம்களின் பலமான அமைப்பு

எது என்ன குறையாக இருந்தாலும், இன்று முஸ்லீம்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அமைப்பாக ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸே காணப்படுகின்றது. இதனை வீழ்த்துவதென்பது எந்த பேரினவாத கட்சிகளாலும் முடியாது. மாறாக பலமுள்ள முஸ்லீம் இயக்கம் ஒன்றினால்தான் முடியும்.

# சுவரொட்டி கிழிக்கவும் தமிழர்கள்

ஜூலை 30ம் திகதி சனிக்கிழமை இரவு 10.30. இடம் கொட்டாஞ்சேனை ஸ்ரீ குணாநந்த மாவத்தை. ஒஸி ஆதரவாளர்கள் பத்து பேரளவில் வந்தனர். வீதி முழுதும் பச்சைக்கொடிகளைக் கட்டினர். சுவர்களை எல்லாம் ஒஸியின் சுவரொட்டிகளால் மறைத்தனர். வீதியையும் கடந்து போயினர். 10.50 அளவில் பொது முன்னணியின் வேட்பாளர் பௌசியின் ஆதரவாளர்கள் வந்தனர். மேலே தொங்கிக் கொண்டிருந்த பச்சைக் கொடிகளை இழுத்தெறிந்தனர். நீலக் கொடிகளைக் கட்டினர். ஒஸியின் சுவரொட்டிகளால் மூடப்பட்டிருந்த சுவரை இப்போது பௌசியின் நீலநிற சுவரொட்டிகள் ஆக்கிரமித்தன. அந்தப் பாதையில் தங்கள் கடமை முடிந்து இடத்தை விட்டகன்றனர். 11.15 அளவில் ஐ.தே.க.வேட்பாளர் சுசில் முனசிங்கவின் ஆதரவாளர்கள் கொடிகள் கொண்டு வரவில்லை. எனினும் நீல கொடிகளை அறுத்தெறிந்தனர். பௌசியின் சுவரொட்டிகளால் ஆக்கிரமத்திருந்த சுவர் இப்போது சுசில் முனசிங்கவின் சுவரொட்டிகளால் மூடப்பட்டன.

11.45 அளவில் ஐந்து பொலிசார் வந்தனர். கூடவே இருவரை அழைத்து வந்தனர். சுவரொட்டிகளை கிழிக்குமாறு கூட்டி வந்தவர்களுக்கு உத்தரவிட்டனர். பாவம் இவ்விளைஞர்கள். ஏணி வைத்து சுவரின் மேல் பகுதியில் ஒட்டிய வற்றை எல்லாம் எட்டி எட்டிக் கிழித்தனர். படம் பார்த்து விட்டு வந்த இரண்டு இளைஞர்கள் தான் அவர்கள். சுவரொட்டிகளைக் கிழி அல்லது உள்ளே போடுவோம் என பொலிசார் அவர்களை அழைத்து வந்திருக்கிறார்கள். சொல்லாமலே தெரியக்கூடிய ஒரு விடயம் அவர்கள் தமிழர்கள் என்பதுதான்.

## வெனப்புவவிலும் கொலை!

நான் அரச அலுவல்கள் நீதியான வழிகளில் செய்வது தடுக்கப்படுகின்றது. அதனால் விடுமுறையில் செல்கிறேன்' என வெனப்புவ பொலிஸ் நிலையப் பொறுப்பாளர் உமகிலி அவர்கள் பொலிஸ் முறைப்பாட்டுப் புத்தகத்தின் (RIB)365 பக்கத்தில் எழுதியுள்ளார்.

ஐ.தே.கவின் குண்டர் படை ஒன்று, வெனப்புவ தொகுதியிலுள்ள, லுணுவில சொய்சா வீடமைப்பு திட்டத்தில் வசிக்கும் ஸ்டான்லி பெனாந்து (29) என்னும் பொ.ஐ.மு.ஆதரவாளரைக் கொலை செய்தது. இக் கொலை தொடர்பான சந்தேகநபர்களை பொலிஸ் நிலையப் பொறுப்பாளர் உமகிலி கைது செய்யச் சென்ற போது அமைச்சர் ஃபெஸ்டல் பெரேராவின் வேலைகளில் தலையிட வேண்டாம். உத்தியோகபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்க வேண்டாம் என வெனப்புவ உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்சரித்துள்ளார். ஆனால் பொலிஸ் நிலைய பொறுப்பாளர் உமகிலி மீறிச் சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளார்.

ஐ.தே.க புத்தளத் தொகுதி தலைமை வேட்பாளர் ஃபெஸ்டல் பெரேரா சந்தேக நபர்களை விடுவிக்கக்கூறி கடுமையாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை எச்சரிக்க அவர் உமகிலி அவர்களைப் பின்னர் எச்சரித்துள்ளார்.

இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் சந்தேக நபர்கள் மீது தொடர்ந்தும் உமகிலி அவர்கள் நடவடிக்கை எடுத்ததால், ஆத்திரமடைந்த ஃபெஸ்டல் பெரேரா உமகிலி அவர்களை இடமாற்றும்படி, உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அதுமட்டுமன்றி அப்படி நடைபெறாவிட்டால், தான் அவரைக் கவனித்துக் கொள்வதாக எச்சரித்துமுள்ளார்.

வெனப்புவவில் ஐ.தே.கவினதும் ஏனைய கட்சிகளினதும் அரசியல் வன்முறைகளைத் தடுக்க முயன்றவர் உமகிலி அவர்கள். இதனால் இவர்மேல் ஃபெஸ்டல் பெரேராவுக்கு நீண்ட காலமாகவே கடுகடுப்பு இருந்துள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி அரசியல்வாதிகளின் எச்சரிக்கைகளுக்கு கீழ்படிய விரும்பாத உமகிலி அவர்கள் தனது பொறுப்புக்களை ஃபெஸ்டல் பெரேராவின் ஆதரவாளரான திலகரத்தினவிடம் ஒப்படைத்துவிட்டு, முறைப்பாட்டுத் புத்தகத்திலும் தனது பிரச்சினையை எழுதிவிட்டு விடுமுறையில் சென்றுவிட்டார். இப்பொழுது நிலையப் பொறுப்பதிகாரியாக திலகரத்தின அவர்கள் கடமை புரிகிறார்.

## வவுனியா....

எடுப்பதாகத் தெரியவில்லை. அதனால் தாக்குதல் சம்பவம் பற்றியும் அதற்கு பின் நிலவுகின்ற சூழ்நிலைகள் பற்றியும் மக்களிடம் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன.

தோல்வியை அச்சத்தோடு எதிர் பார்த்து இருக்கும் ஐ.தே.கவினரே தமது அரசியற் தேவை கருதி மேற்கொண்டு இருக்கலாம் என சரிநிகருக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் எதிராக தாக்குதல் நடாத்தி நகரத்தில் அமைதியின்மை ஏற்படுவது போன்ற அச்சத்தை உருவாக்கி அதன் மூலம் தம்பக்கம் வாக்காளர்களை திசை திருப்பும் அரசியற் சூழ்ச்சியாகவே இதனை மக்கள் கருதுகின்றனர் என மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை களுத்துறை, கம்பஹா, மாத்தளை, அம்பாந்தோட்டை முதலான மாவட்டங்களிலும் ஐ.தே.கவினரின் நாசகார வேலைகள் தொடர்கின்றன. பொ.ஐ.முன்னணியின் பிரச்சாரக் கூட்டங்களில் குழப்பங்களை ஏற்படுத்தி அதனை பொ.ஐ.முன்னணியின் தலையில் போட்டு தம்பக்கம் வாக்குகளை திரட்டும் முயற்சியில் ஐ.தே.கவினர் ஈடுபட்டுள்ளனர் என எதிர்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.


MINISTRY OF PLANTATION INDUSTRIES
ESTATE WORKER HOUSING DEVELOPMENT PROGRAMME
CERTIFICATE
In pursuance of the Government policy decision of transferring ownership of housing and line gardens of the plantations to the workers of such plantations, we, the undersigned, being the official custodians of such property, do hereby declare our intention to transfer the authorised housing stock and line gardens situated on ........ Estate to the ........ Estate Worker Housing Cooperative Society, subject to formal physical verification of such housing stock and line gardens jointly by the Estate Management and the Estate Worker Housing Co-operative Society and the formal regularisation of such intention to transfer after effecting necessary surveys, valuations and procedural steps connected thereto.
Signed on ........ 199... at ........
Chairman Director
Sri Lanka State Plantations Corporation

பெருந் தோட்டத் தொழில் அமைச்சு
சான்றிதழ்
....... 28 ஒக்டோபரில் .......

ஐ.தே.கவின் லயங்களைச் சொந்தமாக்கும் திட்டத்தின்கீழ் லயன் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள "காணி உறுதி"

# கொஞ்சம் வேதம்....

## பட்டாளம் பாதுகாக்கும்!

"மக்கள் மத்தியில் பயம் நிலவுகின்றது. பயமுறுத்துபவர்களும் இருக்கின்றார்கள். எம்மிடம் வேண்டிய அளவு பணம் இருக்கின்றது. பொலிஸ் இராணுவம், படை அணிகளும் இருக்கின்றன. நீங்கள் அஞ்சத் தேவையில்லை. எந்தவிதமான அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் வந்தாலும் அவற்றை முறியடித்து உங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவோம்."

- வவுனியாவில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க

## பாலும் பூனையும் கதையும்

"அரசாங்கத்துடன் இணைந்து இராணுவத்துடன் செயலாற்றும் தமிழ் குழுக்கள் அரசியலில் தாங்கள் அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் என மேடைகளில் கூறுகின்றார்கள். பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற கதையாகத்தான் இருக்கிறது.

-மு.சிவசிதம்பரம் கூட்டணித்தலைவர்

## இனியவர், நல்லவர்

"யாருக்குமே தீங்கு செய்யாத தீங்கு செய்ய நினைக்காதவர் தான் எமது ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க. இனியவர். எல்லோருக்கும் நன்மை செய்பவர். தமது சொந்த இளைஞர்களுக்கு பயந்து இந்தியாவுக்குச் சென்றிருந்த கூட்டணித் தலைவர்களாகிய மு.சிவசிதம்பரம், வீ.ஆனந்தசங்கரி போன்றவர்கள் திரும்பி வந்து தேர்தலில் போட்டியிடுகின்றார்கள் என்றால், எமது ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் எவ்வளவு தூரத்திற்கு வடக்கில் சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்."

-ஐ.தே.க.வின் பிரசாரக் கூட்டத்தில் ஏ.எச்.எம்.அஸ்வர்

## அமைதியே காரணம்!

"வவுனியாவில் ஒருபரப்பு காணி 3 லட்ச ரூபாவுக்கு விலைபோகின்றது. இதற்கு காரணம் இங்கு நிலவும் அமைதிதான். இந்திய அமைதிப்படையின் பாதுகாப்பில் உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்து 1989ஆம் ஆண்டு தன்னந்தனியாக தேர்தலில் போட்டியிட்டேன். ஐ.தே.க.சார்பில் என்னைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினீர்கள். கல்வி, வேலை வாய்ப்பு தொடக்கம் பல வழிகளிலும் வவுனியாவை நான் அரசாங்கத்தின் உதவியோடு அபிவிருத்தி செய்தேன். இங்கு அமைதி நிலவுகின்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற பகுதிகளில் தேர்தலில் போட்டியிட்டவர்கள் எல்லாம் இன்று இங்கு தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். 40 வருடங்களாக ஒன்றும் செய்யாதவர்கள் தான் இங்கு வவுனியாவை அபிவிருத்தி செய்யப்போகிறார்களாம். எங்கிருந்தோ இங்கு வந்து தேர்தலில் போட்டிக்கு நிற்கிறார்கள்.

- ஐ.தே.க.பிரசாரக் கூட்டத்தில் இராச மனோகரி புலேந்திரன்

## தவறுதான்!

"சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு மாகாணசபையைச் சேர்ந்தது. இலங்கையில் இப்போதுள்ள மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரம் இன்னும் வழங்கப்படவில்லை. குடிமக்கள் தொண்டர் படை (CVF) என்ற பெயரில் அன்று நாம் ஒருபடையை நிறுவினோம். இந்திய அமைதி படை இங்கிருந்து சென்ற போது எமது மாகாணசபை உயிரோடிருக்க வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக இதனை உருவாக்கினோம். அந்த தொண்டர் படைக்காக எமது இளைஞர்களை துரத்தித் துரத்திப் பிடித்தது தவறு என்பதை ஏற்றுக் கொள்கிறோம். அந்தப் படையைத் திரட்டிய முறை பிழையானது என்பதை உணர்ந்து திருத்திக் கொண்டோம். தொடர்ந்தும் அந்த பிழையைச் செய்யவில்லை."

-ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஷ் பிரேமச்சந்திரன்

## சின்னத்தனம் பற்றி...

வவுனியா பகுதியில் பல இடங்களையும் சேர்ந்த 10 பேருக்கு சமாதான நீதவான் (ஜே.பி) பதவியைப் பெற்றுக் கொடுத்தேன். அவர்கள் என்னோடு இருக்க வேண்டும். எமக்கு ஆதரவாக செயற்பட வேண்டும் என்பதற்காக அல்ல. நான் சாதாரணமாக இருந்த போது சமாதான நீதவான் ஒருவரிடம் கையெழுத்து வாங்குவதற்காக பூவரசக் குளத்திலிருந்து வவுனியாக்கு வரவேண்டி இருந்தது. இந்த கஷ்டநிலைமை எனது தொகுதியில் உள்ள கிராம மக்களுக்கு இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் பல பகுதிகளிலும் உள்ள 10 பேருக்கு சமாதான நீதவான் பதவி பெற்றுக் கொடுத்தேன். ஆனால் "என் மூலமாக சமாதான நீதிவான் பதவியைப் பெற்றுக் கொண்ட ஒருவர், கூட்டணி எம்.பி மாவை சேனாதிராஜா தான் எனக்குப் பெற்றுக் கொடுத்தார், எந்த ஒரு தேவைக்கும் நான் இயக்கங்களிடம் போவதில்லை" என்று பீற்றிக் கொள்வதை பகிரங்கப்படுத்த வேண்டியுள்ளது. இந்த சின்னத்தனத்தை வெளிக்காட்ட வேண்டியுள்ளது."

ஈ.பி.ஆர்.எல்.எப் முன்னாள் எம்.பி.கே.ஆர்.குகனேஸ்வரன்

## மட்டு. தேர்தல் நிலைமை:

# இருட்டடி கவனம்!

இது தேர்தல் காலம் மக்களுக்கு ஓரளவு திருப்திதான். சுற்றிவளைப்புக் குறைவு, காவலரணில் நின்று காட்டிக் கொடுத்தவர்கள் சிரிக்கிறார்கள். யார் யாரோ வீடு தேடி வந்து எனக்கு போடுங்கள், எனக்கு போடுங்கள் என அழாக்குறையாக கெஞ்சிக் குழைகிறார்கள்.

யாருக்கு வாக்குப் போடுவது? இனியும் ஏன் போட வேண்டும் என்பதில் தான் மக்களுக்கு ஒரே தலையிடி. நமது வாக்குகளை வாங்கி பஜீரோக்களில் அமர்ந்து சுகம் கண்ட இவர்கள் தான் நமக்கு டயர் போட்டவர்கள் என்பதைக் கூட எப்படி இலகுவில் மறந்து விட முடியும்?

எங்குமில்லாதவாறு என்றுமில்லாதவாறு மட்டக்களப்பில் தேர்தல் களைகட்டிப் பறக்கிறது. மனிதர்களை போட்டு சுட்டு எரித்த வீதிகளிலெல்லாம் வேட்பாளர்களின் சின்னங்களும், இலக்கங்களும் கால்களில் மிதிபடுகின்றன.

அரச படைகளால் உடைபடாமல் மிஞ்சிப் போய்க் கிடக்கும் சுவர்களிலெல்லாம் எதிர்காலக் கனவு காணும் நமது பஜீரோத் தலைவர்களின் வசனங்களும், போஸ்டர்களும் மினுங்குகின்றன. இதெல்லாம் அரசபடைகள் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அதனை அண்டியுள்ள பகுதிகளிலேயே கோலகலமாயிருக்கின்றன.

வாவிக்கு அப்பாலுள்ள படுவான்கரைப் பிரதேசம், வாகரை போன்ற இடங்களில் வேட்பாளர்களுக்கு செல்வதற்கு பயமாயிருக்கிறது போல் தெரிகிறது. ஏனெனில் ஒரு சில வேட்பாளர்களைத் தவிர ஏனையோர் இன்னும் இப்பகுதிகளுக்கு செல்லவில்லை.

இதைவிட வேட்பாளர்கள் ஒருத்தருக்கொருத்தர் ஏட்டிக்கு போட்டியாக வாய்க்கு வந்ததையெல்லாம் பேசிக் கொண்டு திரிகிறார்கள். புலிகளால் மிரட்டப்படுவது போன்ற தொலைபேசி அழைப்புகளெல்லாம் மாறி மாறி விடுக்கப்படுகின்றதாம்.

அண்மையில் கூட்டணியின் வேட்பாளர் ஒருவருக்கு புலிகளால் மிரட்டப்படுவது போன்ற ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததாம். பேசி முடிந்த பின் வந்த வேட்பாளர் சொன்னாராம் இது பெடியங்களுடைய வேலையில்லை. ஆமியோட திரிஞ்ச இந்தக் காவாலிகளுடைய வேலை என்று சொன்னாராம்.

இதையும் விட கூட்டணி வேட்பாளர்களுக்கு விருந்து கொடுப்பவர்கள், தீவிரமாக செயல்படுபவர்கள் ரெலோவால் கண்காணிக்கப்படுகிறார்களாம். ஆரையம்பதி, செட்டிப்பாளையம் போன்ற ஒருசில இடங்களில் கூட்டணி ஆதரவாளர்கள் ஒருசிலருக்கு இருட்டடியும் விழுந்துள்ளதாம். வாங்கியவர்கள் மௌனமாயிருக்கிறார்கள். ஏனெனில் இது ரெலோவின் (மறைந்திருந்து தாக்கும் இரவு நேர ரெலோவின் கெரில்லா பாணி) அடியல்லவா?

அண்மையில் மண்டூரில் நடந்த கூட்டணியின் பிரச்சாரக்கூட்டத்துக்கு ரெலோவின் கல்லெறி தாராளமாகவே விழுந்துள்ளது. கல்லாற்றைச் சேர்ந்த கூட்டணி வேட்பாளர் இவ்விடயம் சம்பந்தமாக களுவாஞ்சிக்குடி பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதெல்லாம் இப்படியிருக்கும் போது மட்டக்களப்பில் கண் தோண்டிய காலம் முதல் இன்றுவரை அரசபடைகளுக்கு துணை நிற்கும் புளொட் மோகனை தேர்தல் முடியும் வரை மட்டக்களப்புக்கு செல்லக்கூடாதென மேலிடத்து உத்தரவாம். இவர் தற்போது கொழும்பிலேயே உள்ளதாக அறிய முடிகிறது.

முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் தான் விழி பிதுங்கி தலையைத் தொங்கப் போட்டபடி திரிகிறாராம். ரெலோ இயக்கத்தினரின் ஒரு பகுதியினரே இவர் வென்றுவிடக் கூடாதென மறைமுக செயற்பாடுகளில் இறங்கியுள்ளனராம். அதையும் விட இவரின் சொந்த ஊரான செட்டிபாளையத்தில் இவருக்கு இருக்கும் செல்வாக்கோ சொல்ல முடியாதாம். இவருக்கெதிராக இவரின் சொந்த ஊரிலேயே மூன்று பேர் தேர்தல்களத்தில் குதித் துள்ளார்கள்.

முஸ்லீம் பிரதேசங்களில் நிலைமை சற்று வித்தியாசம். ஐ.தே.கட்சிக்கும், முஸ்லீம் காங்கிரஸுக்குமே கடும் போட்டி நிலவுகின்றது. முஸ்லீம் காங்கிரஸின் சுவரொட்டிகளைப் பொலிசாரே தார் அடித்து கிழிப்பதைக் காணமுடிகிறது. ஆனால் ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் சுவர்களில் சிரித்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

கல்முனைக்குடி, காத்தான்குடி போன்ற இடங்களிலுள்ள பள்ளிவாசல்களிலுள்ள மௌலவிகள் மரத்துக்கு வாக்களிக்காதோரை பள்ளிவாசலுக்கு கூட எடுக்க முடியாதென்னவும் அல்லா நரகத்துக்கு அனுப்புவார் எனவும் கூறுகிறார்கள். முஸ்லீம் காங்கிரஸின் வாக்குத் திரட்டும் உபாயம் புரிகிறதல்லவா?

முஸ்லீம் பகுதிகளில் முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்களும் ஐ.தே. கட்சி ஆதரவாளர்களும் ஒருத்தருக்கொருத்தர் கல்மழை பொழிவதிலும் அடிபடுவதிலும் ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த வேட்பாளர்களுக்கெல்லாம் இன்னும் ஒரு விசயம் விளங்கவில்லை போல் தெரிகிறது. தங்கள் சின்னத்தை கொஞ்சம் வித்தியாசமாய் வைத்திருந்தால் மட்டக்களப்பின் ஐந்து ஆசனங்களுக்கும் நிச்சயம் பழைய டயர் சின்னத்தில் (தாங்கள் முதல் ஆமியுடன் சேர்ந்து தூக்கிய சாமான் தானே) கேட்டிருந்தால் பயந்து மிரண்டு தலைசுற்றெடுத்து தானாகவே டயருக்கு முன்னால் புள்ளடி விழுந்திருக்கும்.

இன்னும் காலம் போகவில்லை. இது முடிந்தால் இன்னும் ஒரு தேர்தல் வராமலா போகப் போகிறது. டயர் தூக்கிய எமது தலைவர்களே மறந்துவிடாதீர்கள். அடுத்த தேர்தலுக்காவது ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்; பழைய டயரை சின்னமாகப் போட.

## வாக்குப் பெட்டி நிரப்ப படைகள் தயார்!

ஆறாயிரம் வாக்காளர்களே உள்ள தீவுப்பகுதியில் தேர்தலை நடாத்தி யாழ் மாவட்டப்பிரதிநிதிகள் 10 பேரையும் தெரிவு செய்து தனது அணிக்கு பலம் சேர்க்க முயலும் ஐ.தே.கவினர் அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் இறங்கியுள்ளனர்.

இதன்பிரதான கட்டமாக ஜூலை 31ம் திகதி தேர்தல் ஆணையாளர் கடற்படைத்தளபதி, இராணுவத்தளபதி உட்பட உயர் அதிகாரிகள் பலர் தீவுப்பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்துள்ளனர். 475 வாக்களிப்பு நிலையங்கள் உள்ள யாழ் மாவட்டத்தில் 300 வாக்களிப்பு நிலையங்களை ஏற்பாடு செய்து குறைந்தது 3 லட்சம் வாக்குகளையாவது பெட்டிகளுக்குள் நிரப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தீவுப்பகுதியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்த ஏற்பாடுகள் தொடர்பாக வடபிராந்திய பொலிஸ்மா அதிபருக்கோ அல்லது யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சருக்கோ எதுவுமே தெரியாது என அவர்கள் மறுத்து விட்டதாக பெயர் குறிப்பிட விரும்பாத பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தீவுப்பகுதியைத் தவிர இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய கரையோர பகுதிகள் யாவும் சனநடமாட்டம் இல்லாத சூனியப் பகுதியாக இருப்பது யாவரும் அறிந்த விடயம். வேட்புமனுத்தாக்கல் செய்யச் சென்ற ஒரு கட்சியின் அரசியற் பிரமுகரே உடைந்த கட்டங்களையே தெல்லிப்பழையில் காண முடிந்தது எனக் குறிப்பிட்டார். இந்த நிலையில் அமைக்கப்படவிருக்கும் 300 வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிக்கப் போவது யார் என்ற கேள்விக்கு சொல்லாமலே தெரியும் விடைதான் அங்கு நிலை கொண்டுள்ள படையினர் என்பது.

## பலாலித் தாக்குதலில் ஹெலி சேதம்!


ஆகஸ்ட் முதலாம் திகதி அதிகாலை 2.45ற்கு பலாலி விமான நிலையத்தை புலிகள் தாக்கியுள்ளனர். 30 சதுர மைல் பரப்பளவு கொண்ட பாரிய விமானத் தளத்தின் மையப்பகுதியில் 2மணி நேரம் சண்டை நடந்ததாகவும் இழப்பு விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் இரண்டு பிரிவாக தொலைத்தொடர்பு நவீன ஆயுதங்கள் சகிதம் விமான நிலையத்தில் ஊடுருவி விமானத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட ''பெல்'' ரக ஹெலிகொப்டர் ஒன்றைத் தகர்த்துள்ளதாகவும் இத் தாக்குதலில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் மயிரிழையில் தப்பி விட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து காலையில் இருந்து இரவுவரை பலாலியைச் சுற்றியுள்ள பகுதிகளை நோக்கித் தொடர்ந்து 50கலிபர் தாக்குதலும் ஷெல் தாக்குதல்களும் நடைபெற்றுள்ளன.

மண்டைதீவுப் பகுதியில் திடீரென ஊடுருவிய புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதலில் மூன்று புலிகள் கொல்லப்பட்டதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## MR.SRI LANKA



பகிரங்க இடங்களில் போஸ்டர்கள் ஒட்டுவது மற்றும் பிரச்சார சாதனங்கள் எதனையுமே பகிரங்கமாக கண்காட்சிக்கு விடுவது சட்டப்படி குற்றமாகும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்த மறுநாளே கொழும்புச் சுவர்களெல்லாம் ஒட்டப்பட்ட வண்ணப்போஸ்டர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினுடையதாகும். சட்டம் ஒரு கழுதை என்றால் யானைகள் அதனை உதாசீனம் செய்வது புதிய விஷயமல்ல. புதிய விஷய மென்னவெனில் இம்முறை தேர்தல்களோடு நவீன விளம்பர உத்திகளும் வேட்பாளர்களின் கவர்ச்சிகரமான விம்பங்களை (IMAGE) நவீன முறையில் பொதுசனத் தொடர்பு சாதனங்களூடாகச் சந்தைப்படுத்தும் நடைமுறையுமாகும்.

கொழும்பிலுள்ள எல்லாப் பிரபல விளம்பர முகவர் நிலையங்களுக்கு படு பயங்கரமான வேலைப் பளு என்று தெரிய வருகிறது. ''ஆணழகன்'' ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்தை நவீன விளம்பர உத்தி முறைகளோடு நெறிப்படுத்துவதற்கு ஒரு அமெரிக்கக் கனவான் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறார் என்று தகவல். இந்தக் கனவான்தான் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் தேர்தல் கால விளம்பரங்களையும் கவனித்துக் கொண்டவராம். சந்தைப்படுத்த வேண்டிய முறையில் சந்தைப் படுத்தினால் எந்தச் சரக்கையும் - களிமண்ணையும் கூட கஸ்தூரி மஞ்சள் என்று விற்றுவிடலாம் என்பதுதானே திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படை!

## வவுனியா குண்டு வெடிப்பு: ஐ.தே.கவின் தந்திரம்!

ஜூலை 24ம் திகதியிலிருந்து ஆகஸ்ட் 1ம் திகதி வரையிலான எட்டு நாட்களுக்குள் வவுனியா நகரப் பகுதியில் மக்களைப் பீதி கொள்ள வைக்கும் இரண்டு கிரனைட் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. ஒன்று 24ம் திகதி இரவு 8.30 மணிக்கு வவுனியா நகர புகையிரத வீதியிலும் மற்றையது 1ம் திகதி இரவு 9.45மணிக்கு மன்னார் புகையிரத வீதியிலும் சனநடமாட்டம் இல்லாத வேளையில் நடைபெற்றுள்ளன. இச்சம்பவங்களில் மொத்தம் 8 பொலிசார் மிகச் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர். ஆனால் இச் சம்பவங்களை பெரிதுபடுத்த வேண்டும் என நினைத்த அரச தரப்பினர் இரண்டு பொலிசாரை அனுராதபுரம் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். கூடவே பொலிசாரின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த நகரின் பாதுகாப்பில் இப்போ இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிசாரைத் தாக்குவது போன்ற பாணியில் நடைபெற்ற இத்தாக்குதல் தொடர்பாக இராணுவத்தினரோ பொலிசாரோ தீவிர கவனம் →


பெண்களே...
உங்கள் வாக்கு யாருக்கு?

எந்த வேட்பாளர்கள்
0 யுத்தத்தை நிறுத்துவதற்கு முயற்சி செய்கிறார்களோ?
0 எல்லா வகையான பேரினவாதங்களுக்கும் எதிராக இருக்கிறார்களோ?
0 பெண்களுக்கு எதிரான எல்லா வன்முறைகளுக்கும் எதிராக உள்ளார்களோ?

அவர்களுக்கே வாக்களியுங்கள்!
உங்களுடைய வாக்குகள் மிகவும் வலியன!!

சமாதானத்துக்கான பெண்கள் ஒன்றியம்
WOMEN'S FORUM FOR PEACE



சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 1994-08-03
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.